மாதிரி விற்பனை வரி போடுவது இந்த இசை வளர்ச்சியை ஓரளவிற்குப் பாதிக்கும் என்பதை அரசாங்கம் ஏற்று அதற்கு முழு நிவாரணமும் அளிக்க முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது நிபுணர் சிபார்சு. டாக்டர் லோகநாதன் அவர்கள் அறிக்கையில் 6 சதவிதம் போட வேண்டுமென்று அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். சர்க்கார் பரிசீலனை செய்து அதை 4 ஆக குறைத்து. மறுபடியும் இது சிங்கில் பாயின்டில் இருந்து மல்டி பாயின்டிற்கு போகவேண்டுமென்று இன்னொரு நிபுணர் பார்த்துச் சொல்லவேண்டும். சர்க்கார் ஒவ்வொரு தடவையும் மாற்றிக் கொண்டே இருக்கக்கூடாது.

*** 812 கேள்வி.—திரு. கே. ஆர். முனிரத்தினம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சோப்பு தயாரிப்புக்கு ஒருமுனை விற்பனைவரி போட்டிருப்பதை தள்ளித்தர உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

Government Transport Workers (batta)

* 813 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to place on the table of the House a copy of the orders issued by the Government, revising the daily batta payable to conductors and drivers of the State Transport?

THE HON. SRI R. VENKATARAMAN : A copy [a] of the orders issued by the Government revising the daily batta payable to conductors and drivers of the State Transport Department is placed on the table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், 4 மணி நேரம் பூர்த்தியாக வேலை செய்தால் ரூ. 1.10 ந.பை. பேட்டாவாகவும், 10 ந.பை. தனியாக போனஸாகவும் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அவர்கள் வாங்கிக்கொண்டிருப்பது ரூ. 1.12 ந.பை. ஆகவே இப்போது கைமேல் கிடைப்பது ரூ. 1.10
9-30 ந.பை. என்றிருப்பதால், இதை அதிகமாக்கி கொடுக்க சர்க்கார்
a.m. ஆலோசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மொத்தத்தில் ஜாஸ்தியாக கிடைக்கிறது. 1 ரூ. 10 ந.பை. பேட்டாவாகவும், மேற்கொண்டு 10 ந.பை. போனஸாகவும் கொடுக்கப்படுகிறது. இதன்படி பார்த்தால் 1.20 ஆகிறது. முன்பு வாங்கிக்கொண்டிருந்தது 1.12 தான்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இப்போது கைமேல் கிடைப்பது ரூ. 1.10 தான். நான்கு மணி நேரம் வேலை செய்தால் 10 ந. பைசாவும், ஆறு மணி நேரம் வேலை செய்தால் 15 ந.பைசாவும், 8 மணி நேரம் வேலை செய்தால் 25 ந. பைசாவும் போனஸாக கொடுப்பதற்கு வசூலிக்கப்படுகிறது. இப்போதுள்ள நிலைமையில் விலைவாசி உயர்ந்திருக்கின்ற இந்த நேரத்தில் ஒரு சாப்பாடு ஒரு ரூபாய்க்கு

---

[a] Printed as Appendix V on pages 871–874

30th July 1962]

கிடைக்கிறது. ஆகவே கொடுக்கப்படும் பணத்தை பூராவும் ரொக்கமாகவே கையில் கொடுக்கக்கூடிய உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான்கு மணி நேரம் வேலே செய்கிறவர்களுக்கும் ரூ. 1.50 ந.பை., எட்டு மணி நேரம் வேலே செய்கின்றவர்களுக்கும் ரூ. 1.50 ந.பை. கொடுக்கவேண்டும் என்பதை சர்க்கார் ஏற்றுக்கொள்ள முடியாது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் அவ்வாறு சொல்லவில்லே, 4 மணி நேரம் வேலே செய்கிறவர்களுக்கு 1.20, ஆறு மணி நேரம் வேலே செய்கிறவர்களுக்கு 1.35, எட்டு மணி நேரம் வேலே செய்கிறவர்களுக்கு 1.50 என்று பேட்டா விதாச்சாரம் இருக்கிறது. இந்த விதாச்சாரத்தின்படி கொடுக்கப்படுகின்ற தொகை பூராவையும் ரொக்கமாக கையில் கொடுக்க முடியுமா என்பதுதான் என் கேள்வி.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது இன்ஸென்டிவ் போனஸ் ஸ்கீமின்கீழ்தான் கொடுக்கப்பட்டு வருகிறது இத்தொகையை தீபாவளி போன்ற பண்டிகை நேரங்களில் உபயோகித்துக் கொள்ளலாம் என்று தான் இவ்விதம் சேமிக்கப்பட்டு வருகிறது. இது இன்று நேற்று தோன்றியதல்ல, 1953-ம் ஆண்டிலிருந்தே நடந்து வருகிறது. முன்பு 12 அணுவாக இருந்தது, இப்போது 1.10 என்று கொடுக்கப்படுகிறது. இதில் மாக்ஸிமம் 1.50 வரை கொடுக்கப்படுகிறது. இந்தத் திட்டம் தொழிலாளர்களுக்கு மிகவும் நல்லது என்று அரசாங்கம் கருதுகிறது. நான் இன்னும் ஒரு விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். இந்த இன்ஸென்டிவ் போனஸ் திட்டத்தின்படி முடிவுகளை சொன்னதும், இந்த தொழிலாளர்களுடைய இரண்டு சங்கத்தின் தலைவர்களும் இதை நன்றியுடன் வரவேற்ருர்கள். ஆனல் இப்போது அவர்களிடம் ஏற்பட்டிருக்கின்ற தகராறுகளின் காரணமாகத்தான் யார் இதை ஒப்புக்கொண்டது என்று இந்த வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இதில் தகராறு ஏற்படுவதைப் பற்றி யாரும் சொல்லவரவில்லே. கனம் அமைச்சர் அவர்கள் எதை மனதில் வைத்துக்கொண்டு சொல்கிருர்களோ தெரியவில்லே. நான், இருக்கின்ற பிரச்சனையின் மீது சொல்லுகிறேன். இன்ஸென்டிவ் போனஸ் ஸ்கீமின் அடிப்படையில் இவ்வாறு கொடுக்கப்படுகிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். கைமேல் கொடுப்பதுதான் இன்ஸென்டிவ் ஸ்கீமாக இருக்க முடியும். அரசாங்கம் ஒரு மாடல் எம்ப்ளாயராக இருக்கிறது என்று தொழில் மான்யத்தின்மீது பேசும்போது கனம் தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். தனிப்பட்டவர்கள் நடத்தும் டவுன் பஸ் சர்விஸ்களில் எல்லாம் ரூ. 2.25 பேட்டா கொடுக்கிருர்கள். ஆனல் கனம் அமைச்சர்கள் அவர்கள், தனிப்பட்டவர்கள் யாரும் அரசாங்கம் கொடுப்பதைப்போல் கொடுக்கவில்லே என்று சொன்னுர்கள். தனிப்பட்டவர்கள் அரசாங்கம் கொடுப்பதைவிட கூடுதலாக கொடுக்கிருர்கள் என்பதை நான் நிரூபிக்க முடியும் . . .

[30th July 1962

மிஸ்டர் ஸ்பீக்கர்: நீங்கள் கேள்வியை கேளுங்கள், ஒரு பிரசங்கம் செய்யாதீர்கள் . . .

திரு. மி. கலியாணசுந்தரம்: கனம் அமைச்சர் அவர்களுக்கு விளங்க வைப்பதற்குதான் இதைச் சொல்கிறேன் . . .

கனம் சபாநாயகர்: அமைச்சர் அவர்களுக்கு நீங்கள் சொல்லுவது விளங்கவில்லை என்று சொல்லுவது ஆச்சரியமாக இருக்கிறது.

திரு. மி. கலியாணசுந்தரம்: ஆகவே தொழிலாளர்களுக்கு உடனடியாக உதவக்கூடிய முறையில், கொடுக்கப்படுகின்ற பேட்டா முழுவதையும் கைமேல் கொடுப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான் 100-வது தடவையாக வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். எந்த தனிப்பட்ட முதலாளியும் சர்க்கார் கொடுக்கின்ற சலுகைகள் எல்லாம் கொடுக்கவில்லை என்பதை இப்போதும் சொல்லிக்கொள்கிறேன். பேட்டா கொடுப்பது ஒன்றை மட்டும் எடுத்துவைத்துக்கொண்டு சொல்வது சரியல்ல. சர்க்காரில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு 40 மாத சம்பளம் 'கிராகவட்டியாக' கொடுக்கிறோம். தனிப்பட்ட முதலாளிகள் கொடுக்காத பல்வித சலுகைகளை நாம் கொடுக்கிறோம். சில சலுகைகள் தனிப்பட்டவர்கள் கொடுக்கிறார்கள் என்ற காரணத்திற்காக, அதையும் கொடுக்கவேண்டும், அவர்கள் கொடுக்காத மற்ற சலுகைகளையும் தரவேண்டும் என்று சொன்னால், சர்க்காரால் அதை நடத்த முடியாது. மொத்த வருமானத்தைப் பார்த்தால் சர்க்கார் துறையிலுள்ள தொழிலாளர்களுக்கு அதிகம் வருகிறது என்பதை மீண்டும் சொல்லிக் கொள்கிறேன்.

Mr. SPEAKER: I think we can extend the Question Hour till 9-45 a.m. so that we can dispose of the remaining questions.

நீலகிரி ஜில்லா (ஜனத்தொகை)

*814 **கேள்வி.—திரு டி. கார்ச்சா கவுடர்:** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1961-ம் வருட ஜனகணிதப்படி நீலகிரி ஜில்லாவின் ஜனத்தொகை என்ன? அதில் படகர்கள் எத்தனை பேர்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Population of the Nilgiris District is 409,308. Particulars regarding the population of Badagas in the District have not yet been finalised.

நான் ஆங்கிலத்தில் விடையளித்ததை இப்போது தமிழில் சொல்லுகிறேன். (இந்த முறையில், ஆங்கிலத்தில் முதலில் படித்துவிட்டு, அதன் பின்னால் தமிழிலேயே அதை சொல்கின்ற பழக்கத்தை கொண்டுவரலாம் என்று நினைக்கிறேன்.) தமிழில்